3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சேலம் மாவட்டம் பூலாம்பட்டி ஆற்றங்கரையில் காவலர்கள் பிடிக்கப் போன ஒருவர் மாண்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ஜுனன் அவர்கள் சேலம் மாவட்டம் பூலாம்பட்டியில் பழனிச்சாமி என்ற இளைஞர் இறந்துவிட்டதாகவும் அதனால் அந்தப் பகுதியில் பதட்ட நிலை நிலவுகிறது என்றும் கூறி இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோரி ஓர் அறிவிப்புக் கொடுத்துள்ளார். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மிகச் சுருக்கமாக விளக்குமாறு வேண்டுகிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ராமிரெட்டி பட்டி பகுதியிலிருந்து முத்துசாமி என்பவருடைய மகன் பெரியசாமி என்கிற பழனிச்சாமி, அவரையும் அவருடைய தாயாரையும், முதல் மனைவியையும் முத்துசாமி என்பவர் கைவிட்டு விட்டபடியால் அவர் எடப்பாடி தொகுதி பூலாம் பட்டிக்கு சென்று அங்கே வாழ வழி இல்லாத சூழ்நிலையில் சமூக விரோதமான காரியத்தில்—சாராயம் விற்கிற தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவர் காவல் நிலையத்திற்கு மாமூல் கொடுக்காத காரணத்தால் அவரை காவல் துறை யினர் துரத்திச் சென்ற போது, அவர்களுடைய கைகளுக்கு கிடைக்காமல் அவர் ஓட முயன்றபோது அங்கே மின்சாரத்திற் காக கட்டப்பட்டிருக்கிற கேரேஜுக்கு அருகில் 30 அடி ஆழம் இருக்கிற அந்தத் தண்ணீரில் ஓடி குதிக்கிறபோது, அவர் மீது காவலர்கள் கல்லை எடுத்து வீசியிருக்கிறார்கள். கல் அவருடைய தலையில் பட்டு அதன் விளைவாக தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டார்.

காவலர்கள் விட்டு விட்டு ஓடிய பிறகு, அந்தப் பகுதியி லிருந்த பொதுமக்கள் தண்ணீரிலிருந்து எடுத்து அதன் பிறகு அங்கே சாராயம் காய்ச்சுபவர்களுக்கும், காவல் துறையின ருக்கும் கோ-ஆர்டினேட்டராக இருப்பவர் ஒருவர் சமரசம் செய்த பிறகு, காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கப் பட்டு அதை போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பி, தண்ணீரில் மூழ்குகிற போது ஏற்பட்ட காயத்தினால் அவர் இறந்து விட்டதாக 174 சி. ஆர். பி. சி. யின் கீழ் வழக்கை போட்டு முடித்து விட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை ஒரு குற்றச்சாட்டாகக் கூட எடுத்துக் கொள்ளாமல்—இது அந்தப் பகுதியில் ஒரு பதட்டத்தை உருவாக்கி இருக்கிறது. உள்ளபடியே சொல்லப் போனால் அவர் சாராயம் விற்றது தவறு. அவர் காவல் துறையின் கைக்கு கிடைக்காததால், அவரை குண்டாஸ் ஆக்டின்படி அவர் மீது நடவடிக்கை எடுக்க வழி இருக்கிறது. அதற்கு பதிலாக அவருடைய உயிரையே எடுத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு காவல் துறை தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி இருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறை கொடுத்திருக்கிற அந்த ரிப்போர்ட்டை தயவு செய்து பரிசீலிக்க வேண்டும். அன்றைக்கு அந்தப் பகுதிக்கு ரெய்டு சென்றவர்கள் மூன்றே மூன்று காவலர்கள் தாம். சாதாரணமாக ரெய்டுக்கு செல்லுகிறபோது குறைந்த பட்சம் ஒரு ஹெட்கான்ஸ்டபிள் அல்லது சப்-இன்ஸ்பெக்டர் தலைமை ஏற்றுத்தான் நடத்திச் செல்ல வேண்டும். ஆனால் காவலர்கள் தாம் சென்றிருக்கிறார்கள். அதிலே நடந்த தவறுகளை கீழேயிருந்து மேலே உள்ள அதிகாரிகள் வரை அத்தனை பேரும் மூடி மறைக்கிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையும் அப்படித்தான் கொடுக்கப்பட்டிருக்கும். எனவே தயவுசெய்து தாங்கள் மீண்டும் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியில் இருக்கிற பதட்டத்தை தணிக்க வேண்டுமென்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். அதற்காக இந்த அவையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பழனிச்சாமி என்று ஒத்திவைப்புத் தீர்மானத்திலே குறிப்பிடப்பட்டுள்ள நபருடைய பெயர் செவிடன் என்கின்ற பெரியசாமி என்றும் அழைக்கப்படுகிறது என்பதாக போலீசார் அளித்துள்ள அறிக்கையிலே காணப்படுகிறது. அந்த அறிக்கையின்படி 15-ஆம் தேதி பகல் சேலம் மாவட்டம் பூலாம்பட்டி காவல் நிலையக் காவலர்கள் மதுவிலக்கு வழக்கு சம்பந்தமாக பூலாம்பட்டி ஆற்றங்கரையிலே சென்ற போது ஆற்றங்கரையிலே கள்ளச் சாராயம் விற்றுக்கொண்டு இருந்த குப்பனூரைச் சேர்ந்த முத்துசாமி என்பவருடைய மகன் செவிடன் என்கின்ற பெரியசாமி போலீசார் வருவதைப் பார்த்து ஆற்றிலே குதித்து தப்பி ஓட முயற்சித்தார் என்றும் அப்படிக் குதித்த பொழுது அவருடைய தலையிலே காயங்கள் ஏற்பட்டன என்றும் சுமார் 100 அடி தூரம் நீந்திச் சென்று தப்பிக்க முயன்றும் கூட காயத்தினால் ஏற்பட்ட மயக்கத்தில் நீந்த முடியாமல்

தண்ணீருக்குள்ளே மூழ்கி மூச்சுத் திணறி இறந்திருக்கிறார் என்றும் தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே 12–3–1989 அன்று அதே பூலாம்பட்டி காவல் நிலையத்தில் சாராயம் விற்றதற்காக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திலே 200 ரூபாய் அபராதம் செலுத்தியவரும் அதே நபர் தான். இப்போது பிரேத விசாரணையிலும், இறந்தவர் நீரிலே மூழ்கியதால் மூச்சுத் திணறி இறந்துள்ளதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தலையிலே சிராய்ப்பு காயம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறை மூலமாகக் கிடைத்துள்ள தகவல்கள் இது தான். அவர் கள்ளச் சாராயம் விற்பவராக இருந்தாலும் கூட ஏற்கெனவே இந்த கள்ளச் சாராய விற்பனையின் காரணமாக அதே காவல் நிலையத்திலே 200 ரூபாய் அபராதம் கட்டக்கூடிய அளவுக்கு பிடிபட்டவராக இருந்தாலும் கூட அவருடைய சாவுக்குக் காவல்துறை காரணமாக இருக்க ஏதாவது சூழ்நிலை இருந்திருக்க முடியுமேயானால் அதுபற்றி மேலும் தொடர்ந்து விசாரித்து மேல் அதிகாரிகளைக் கொண்டு நான் தெரிந்து கொள்ள எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பேன் என்று தெரிவித்து எனவே இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவனஈர்ப்பு

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கஞ்சா சாகுபடி செய்வதால் மக்கள் பாதிப்பு:

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் சுமார் 650 ஏக்கர் நிலத்தில் கஞ்சா சாகுபடி செய்துள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்: